*11*

# கட்டுப்படுத்துதலுக்குப் போராட்டம் (4:1-10)

*சர்வதேச வேதாகமக் கல்லூரியின் மாணவன் என்ற வகையில் நான், ஒருநாள் சபை ஆராதனையின் போது, நன்கு அறியப்பட்ட மற்றும் அதிகமாய்ப் பயணம் செய்கிற ஒரு பிரசங்கியார் "நாம் ஒருவர் மற்றவருடன் எவ்வாறு பழகுவது என்று தெரியவில்லை என்பதே சபையில் நாம் கொண்டுள்ள முதல் பிரச்சனையாக உள்ளது" என்று கூறியதைக் கேள்விப்பட்டேன். இளநிலைப்பட்டம் பயிலுபவர்களில் பெரும்பான்மையானவர்களை போலவே பலகாரணங்களினால் நான் அந்தக் கூற்றினால் மிகவும் மனம் ஈர்க்கப்பட்டேன், அந்தக்கூற்று என்னைத் தாக்கிற்று. பல காரணங்களுக்காக, நான் அந்தக் கூற்றினால் செல்வாக்கு செலுத்தப்பட்டேன். முதலாவது, அந்தக் கூற்றைக் கூறிய மனிதரின் பயணங்கள் மற்றும் அவர் ஏற்படுத்தியிருந்த தொடர்புகள் ஆகியவை என்மீது செல்வாக்குச் செலுத்தியிருந்தன. அடுத்தது நமது ஐக்கியத்திற் குள்ளாகப் பல பிரிவினைகள் நிலவின என்ற விஷயம் என் மனதில் ஆழப்பதிந் திருந்தது. பரிசுத்தவான்கள் எங்கு ஒன்று கூடுகின்றனர் என்ற வெளியீட்டின் 1987ம்ஆண்டுப் பதிப்பானது, கிறிஸ்துவின் சபைகளின், மாறுபட்ட 19 வகைப் பிரிவுகளைப் பட்டியல் இட்டுள்ளது. கடைசியாக, அதிர்ந்தெழுந்து வளருகிற சபைகள், தேவையற்ற கருத்து வேறுபாடு, முரண்பாடு அல்லது பிரிவினை ஆகியவற்றில் "நின்று தழைக்கின்றன" என்று நான் கேள்விப்பட்ட விஷயத்தை நினைவுகூர்ந்தேன். ஆனால் இது பிரச்சனையல்ல, பிரச்சனையின் அடையாளமாக மட்டும் உள்ளது என்பதை, நமது வேதவசனப்பகுதியான யாக்கோபு 4:1-10ல் இருந்து நாம் காணுவோம்.*

*யாக்கோபின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்கள், இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்களைக் காட்டிலும் அதிகமாக வேறுபட்டு இருப்பதில்லை என்பதை யாக்கோபின் எழுத்துக்களில் இருந்து நாம் கண்டறிகிறோம். அவர்கள் வாழ்வின் உள்ளாகவும் புறம்பாகவும் பிரச்சனைகள் தொற்றியிருந்தன. அவர்கள் பிறருடன், விசேஷமாக இன்னொரு பொருளாதாரப் பிரிவினருடன் தக்கவகையில் தொடர்பு கொள்வதில் சிரமம் கொண்டிருந்தனர். அவர்களில் பலர், தங்கள் நடக்கையின்மீது, தங்கள் விசுவாசம் செயல்தாக்கம் ஏற்படுத்துவதை அனுமதிக்காது இருந்தனர். சிலர் அதிகம் பேசிக்கொண்டு, விவாதித்துக்கொண்டு, விமர்சித்துக்கொண்டு அல்லது தங்களையே உயர்த்திக்கொண்டு இருந்தனர். இப்போது நாம், இந்த ஆதிகால கிறிஸ்தவர்கள் இன்னொரு வழியில் நம்மைப் போல் இருந்தனர் என்று காணுகிறோம்: நீதியின் விளைச்சலுக்கு அவசியமான சமாதான சூழ்நிலையைப் பராமரிப்பதற்குப்பதிலாக (3:18). நிலையான "சண்டைகள் மற்றும் முரண்பாடுகள்" (4:1). என்று சூழ்நிலையிலேயே அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்.*

*அவர்கள் (மற்றும் நாம்) ஏன் ஒருவர் மற்றவருடன் நன்கு பழக முடியவில்லை*

என்பதற்கான காரணத்துடன் யாக்கோபு அவர்களை (மற்றும் நம்மை) எதிர் கொள்கிறார்.

## *சண்டைகள் (4:1-3)*

*உடனடியாக (4:1) யாக்கோபு, அவர்களின் பிரச்சனைகளுடைய தோற்றத்தை அவர்களின் "யுத்தங்கள் மற்றும் சண்டைகள்" ஆகியவற்றின் ஆதாரமூலத்தை அவர்கள் அறியவேண்டும் என்று விரும்புகிறார். கிறிஸ்தவர்களென்று தங்களை அறிவித்துக்கொண்டவர்களிடத்தில் யாக்கோபு பேசினார். அவர், "உங்களுக்குள்ளே" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். கிறிஸ்துவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில் அவர்கள் நன்கு இசைந்திருக்கவில்லை. புதிய ஏற்பாட்டு சபைகள் சிலவற்றை ஆய்வு செய்கையில், அவைகள், கருத்து வேறுபாட்டில் தங்கள் பங்கைக் கொண்டிருந்தன எனபதைக் காணுகையில் நமக்குத் திகைப்பு ஏற்படுகிறது. கொரிந்து நகரில் இருந்த சபையின் உறுப்பினர்கள், ஒருவருக்கொருவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துகொண்டனர், மற்றும் சபைகூடிவருகையில் அவர்களில் ஒருவர் பிறருக்கு எதிராகப் போட்டியிட்டனர் (1 கொரிந்தியர் 6:1-8; 14:23-40). இருந்த விசுவாசிகள், ஒருவரையொருவர் "கடித்துப் பட்சித்துக்" கொண்டிருந்தனர் (கலாத்தியர் 5:15). பவுலுக்கு மிகவும் பிரியமான பிலிப்பி நகரத்து சபையிலும்கூட, கருத்து ஒருமைப்பட இயலாத இரு பெண்கள் இருந்தனர் (பிலிப்பியர் 4:2, 3). தொடக்ககால சபையில் இருந்ததும், 1980/2010களில் (அல்லது இன்றைய நாட்களில்) இருக்கத் தொடருவதுமான ஒரு பிரச்சனையைப் பற்றி யாக்கோபு எடுத்துரைக்கிறார்.*

*பிரச்சனையை விவரிக்க, யாக்கோபு பயன்படுத்துகிற வார்த்தைகளின் பலத்தைப்பற்றி நாம் ஆழ்ந்து சிந்தித்தல் என்பது நம்மை மூழ்கடிப்பதாக உள்ளது.* NIV *வேதாகமம், இவ்விடத்தில் கொண்டுள்ள* "fights and quarrels" *என்ற தனது மொழிபெயர்ப்பில், அனேகமாகப் பலவீனமாக உள்ளதென்றே கூறலாம். பிரதானமான பிற மொழிபெயர்ப்புகளில்* (KJV, ASV, RSV), "wars and fightings" *("யுத்தங்களும் சண்டைகளும்") என்றுள்ளது. 4:1-3ல் யாக்கோபு, யுத்தத்தின் மொழிநடையை உருவகமாகப் பயன்படுத்துகிறார். ஆனால் யாக்கோபு உருவக நடையைப்பயன்படுத்துகிறார் என்பதால் மாத்திரம், அவரது வார்த்தைகளில் உள்ள வலிவையும், அவை நமது இருதயங்களில் அடித்துத்தாக்க விருப்பநோக்கம் கொண்டுள்ள பயங்கரத்தையும் நாம் புறம்பே எடுத்துப்போடாது இருப்போமாக. இருபதாம் நூற்றாண்டில், ஊடகத்தின் முன்னேற்றங்கள் மற்றும் உலகம் முழுவதிலும் இயல்பான யுத்தங்களின் அறிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக, நமது உணர்வுகள் கடினம் அடைந்துள்ளன. எல்லாத் தலைமுறைகளிலும் அனேகமாக நாம், யுத்தம் என்ற சொல் குறித்து, தனிப்பட்ட அல்லது ஒழுக்கரீதியான சினம் கொள்ளும் உணர்வைக் குறைந்த அளவே கொண்டுள்ளோம் எனலாம். யாக்கோபு கூறுகிற விஷயத்திற்கு நாம் நமது உணர்வைத் தட்டி எழுப்புவது அவசியமாகிறது. கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகள் மற்றும் சண்டைகள், விரோதங்கள் மற்றும் மோசமான உணர்வுகள் ஆகியவற்றைப் பற்றிக் கூறுவதற்கு வேறு வழியில்லாததால் அல்ல, ஆனல் அவற்றின் பயங்கரத்தை விளக்குவதற்கு வேறு வழியில்லாத காரணத்தினாலேயே, அவற்றை விவரிப்பதற்கு யுத்தத்தின் வார்த்தைகளை யாக்கோபு பயன்படுத்துகிறார். உள்ளூர் சபைக்குள் இருக்கும் உறவுமுறைகளைத்*

தேவனுடைய கண் மூலமாக அவர் (யாக்கோபு) காணுகிறார், நாம் அவ்வாறே காண வேண்டும் என்று விரும்புகிறார்.

திறன்மிக்க அறுவைச் சிகிச்சை நிபுணரைப் போல் யாக்கோபு, சரீரத்தை (சபையை) அழித்துக் கொண்டிருக்கும் புற்றுநோயைத் திறந்து வெளிப்படுத்துகிறார். யாக்கோபுவின் காலத்தில் இருந்த கிறிஸ்தவர்கள் (மற்றும் இருபத்தியோராம் நூற்றாண்டில் உள்ள கிறிஸ்தவர்கள்) தங்கள் சுய இச்சைகளாலும் விருப்பங்களாலும் ஆளப்பட்டு மற்றும் கட்டுப்படுத்தப்பட்டு இருப்பதே, அவர்கள் ஒருவர் பிறருடன் இசைந்திருக்க இயலாமைக்குக் காரணமாகும் (4:1ஆ). கட்டுப்படுத்தலுக்கான நிலையானதொரு போராட்டம், கிறிஸ்தவர்களுக்குள்ளாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. விசுவாசிக்கு உள்ளாக நடக்கும் இந்தப் போராட்டத்தை விவரிக்க, வரைவளவான மொழியை யாக்கோபு பயன்படுத்துகிறார். இந்தப் போராட்டம், சுயநலமுள்ள வாழ்வு மற்றும் சுயநலமற்றவாழ்வு ஆகியவற்றிற்கு இடையில் நாம் மேற்கொள்ளும் தெரிவைப் பற்றியதாக உள்ளது.

தவறான முடிவு மேற்கொள்ளப்படும்போது, கட்டுப்படுத்தப்படாத அந்த சுய இச்சையானது, ஒரு கிறிஸ்தவர் இன்னொரு கிறிஸ்தவரைப்பற்றி தம் மனதில் கொண்டுள்ள எண்ணப்போக்கு மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றில் மேலாதிக்கம் செலுத்திற்று (4:2). உள்ளூர் சபையின் உறவுமுறைகள் அழிக்கப்பட்டிருந்தன என்பது தெளிவு. ஒரு கிறிஸ்தவர், வேறுயாருக்கோ சென்றுகொண்டிருந்த மதிப்பை தாம் பெற்றுக் கொள்ள விரும்பினார், அதைப்பெற அவர் எதைவேண்டும் என்றாலும் செய்வார். அவர்களின் சூழ்நிலைகள் சிதைந்திருந்தன; அவர்களின் ஜெபங்களும்கூட அவர்களின் இச்சைகளினால் மோசம் போக்கப்பட்டு இருந்தன (4:2, 3).

இன்றைய நாட்களில் நாம் இந்தப் பிரச்சனையைக் கொண்டுள்ளோமா? ஆம்! “பொறுப்பாளராக அல்லது கட்டுப்படுத்துபவராக இருக்கப் போவது யார்?” என்ற கேள்வியில் இருந்தே சபையின் பெரும்பான்மையான பிரச்சனைகள் வருகின்றன. பிரச்சனையின் இவ்வகைகள், முந்திய அதிகாரத்தில் யாக்கோபு, “கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும்” என்று விவரித்துள்ளதான, நமது சொந்த சுய இச்கைளினால் போஷிக்கப்படுகின்றன. நம்மிடத்தில் எல்லாப் பதில்களும் உள்ளன என்று நாம் நம்பி இருக்கிறோம் மற்றும் நடத்துவதற்கு மக்கள் நம்மை ஏன் நோக்குவதில்லை என்று நம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை. அவர்கள் நம்மை நோக்காத போது, நாம் மக்களை மற்றும் சூழ்நிலைகளை நமது விருப்பத்திற்கேற்பக் கையாண்டு, அவர்கள் நமது வழியைக்கண்ணோக்கும்படி செய்கிறோம்.

யாக்கோபு பயன்படுத்துகிற மொழிநடையானது, நாம் நமது சிறுவேளை கருத்து வேறுபாடுகள் மற்றும் அவ்வப்போதைய சச்சரவுகள் ஆகியவை, அப்படிப்பட்ட விவரிப்புக்குப் பாத்திரமானவை என்ற வகையில் அவற்றைக் காண நேர்மறையாக மறுக்க வேண்டும் என்று உணரும்படிக்கு, மிகவும் வரம்பு மீறியதாக, மிகவும் மிகைப்படுத்தப் பட்டதாக ஒலிக்கிறது என்பது பிரச்சனையாக உள்ளது. விவாதத்தின் இந்த வரிசையை நாம் எடுத்துக்கொண்டால், நமது சிந்தனைகள் இயேசுவுக்குக் கீழ்ப்படிதலுக்கு அடிமையாக்கப்படுதல் என்ற நமது சிந்தனை, எவ்வளவு பூரணத்துவம் அற்றதாக எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது என்பதை மாத்திரம் நாம் காண்பிப்போம். தன் சகோதரனிடத்தில் கோபம்

கொள்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஆளாவான் என்று இயேசு கூறியபோது (மத்தேயு 5:21, 22), அவர் மிகையாகக் கூறுபவராக இருந்தாரா? தன் சகோதரனில் அன்புகூரத் தவறுபவன் காயீனைப் போல் இருக்கிறான் என்று யோவான் கூறியபோது (1 யோவான் 3:11, 12), அவர் மிகையாகக் கூறுபவராக இருந்தாரா? உள்ளூர் சபையின் உறவுமுறைகளின் முக்கியத்துவத்தை நாமே குறைத்துப் போட்டவர்களாக இருக்கிறோம். எவரொருவருடனும் நன்கு பழக இயலாத, முன்கோபமுள்ள ஒரு சகோதரர் அல்லது சகோதரிமீது நாம், சகிப்புத் தன்மையின் தவறான வகையுடன் புன்சிரிப்பை வகைப்படுத்துகிறோம். உறுப்பினர்களில் இருவர் தவறிப்போய், ஒருவர் மற்றவருடன் இணைக்கமாக முயற்சி செய்யா திருக்கும்போது, நாம் நமது தோள்களைக் குலுக்கிக் கொள்கிறோம். "யுத்தம்" பற்றி ஒருக்காலும் சகிப்புத் தன்மையற்றிருக்கவும் அல்லது "சண்டைகள்" பற்றி நமது தோள்களைக் குலுக்கிவிட்டு சும்மா இருந்துவிடாமலும் இருக்கக் கற்றுக்கொள்வோமாக.

## சுயநலத்திற்குக் கண்டனம் (4:4-6)

நமது சொந்த சுயநலமானது, நீதியின் விளைச்சலை உண்டாக்கக் கூடிய சமாதானத்தை அழித்துப் போடுகிறது. ஆகவே யாக்கோபு, மேட்டிமையைத் தாழ்மைப் படுத்துகிறார் (4:4). நமது சுயநலம், பிறருடனான நமது உறவுமுறைகளை அழித்தது மட்டுமின்றி, அது நம்மைத் தேவனிடத்தில் இருந்து பிரித்துள்ளது. யாக்கோபு என்ன கூறுகிறார் என்பதைப் புரிந்துகொள்ள, புதிய ஏற்பாட்டில் தேவனுடைய மக்கள் அவரது மணவாட்டியாகச் சித்திரிக்கப்படுகின்றனர் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். கர்த்தருக்குள் நாம் கொண்டுள்ள விசுவாசம், "நான் செய்கிறேன்" என்று கூறுதலை உள்ளடக்குகிறது. தேவனு டைய சித்தம் தவிர, வேறு எந்த விருப்பத்திற்காவது பற்றுறுதியுடன் இருத்தல் என்பது ஆவிக்குரிய வகையில் விபசாரம் செய்தல் என்பதற்குச் சமமான தாக உள்ளது. உலகத்தின் சுயநலமான எண்ணப்போக்கினால் கட்டுப்படுத்தப் பட்டிருத்தல் என்பது தேவனுடைய பற்றுறுதிக்கு முற்றிலும் ஒத்திசைவு அற்றதாக உள்ளது. ஒரு தெரிவு மேற்கொள்ளப்படவேண்டும்; அது தேவன் அல்லது சுயம் நம்மீது கட்டுப்பாடு செலுத்துதல் என்பதாக இருக்க வேண்டும்; இவ்விரண்டும் முதன்மை நிலையில் இருக்க இயலாது.

யாக்கோபு 4:5, "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேத வாக்கியம் வீணாய் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?" என்பது விளக்கி உரைப்பதற்கும் விளக்கவுரையாளருக்கும் கடினமான வசனப்பகுதியாக உள்ளது. இவ்வசனத்தில் ஒருசில பிரச்சனைகள் தோன்றுகின்றன. முதலாவது, "வேத வாக்கியம் … சொல்லுகிறதென்று" என்ற வார்த்தைகள், சில வேதவசனப் பகுதிகள் மேற் கோள் காண்பிக்கப்பட வேண்டும் அல்லது குறைந்த பட்சம் மறைமுகமாக உணர்த்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பை உருவாக்குகின்றன, ஆனால் அந்த எதிர்பார்ப்பு நிறைவேற்றப் படுவதில்லை. இரண்டாவது, இவ்வசனத்தின் பிற்பாதி எவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பதில் கல்வியாளர்கள் உடன்படக்கூட முடிவதில்லை. மாறுபட்ட மொழிபெயர்ப்புகள் பின்வருவதைச் சுட்டிக்காண்பிக்கின்றன: "… நமக்குள் தங்கியுள்ள ஆவியானவர்மீது அவர், பொறாமைகொள்ள இச்சையாக இருக்கிறார்?" (KJV) அல்லது "… நமக்குள்

தங்கும்படி அவர் ஏற்படுத்திய ஆவியானவர்மீது அவர், பொறாமைகொள்ள ஏங்குகிறார்" (RSV). இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய நிலையில் இல்லாத போதும்கூட, நமது தேவன் வைராக்கியமுள்ள தேவனாக இருக்கிறார் மற்றும் அவர், போட்டியான எந்த ஆவியையும் பொறாமை தவிர வேறு எவ்வகையிலும் கண்ணோக்க இயலாது என்று நினைத்தல் தர்க்கரீதியாகச் சரியானதாகவே காணப்படும். ஒவ்வொரு இருதயத்தின் முற்றான தனிப்பட்ட அர்ப்பணித்தலைத் தேவன் விரும்புகிறார்.

ஆனால், வைராக்கியமுள்ள இந்த தேவன் கிருபையுள்ள தேவனாகவும் இருக்கிறார். யாக்கோபு "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது" என்று கூறுகிறார் (4:6). முற்றிலுமான அர்ப்பணித்தல் என்பதே தேவனுடைய கொள்கையாக உள்ளது என்று நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறோம். ஆனால் நாம் விரும்பியவற்றிற்குப் பின் செல்வதற்காக நாம் கர்த்தரைக் கைவிட்டிருந்த வேளைகள் இருந்துள்ளன என்பதை நாம் யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். கர்த்தர் மாபெரும் வேண்டுகோள்களை ஏற்படுத்துகிறார் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்கு மாபெரும் கிருபையைக் கொடுக்கிறார். தெரிவு என்பது விசுவாசிகளுக்குத் தெளிவானதாக உள்ளது. அவர்கள் தங்களைத் தாழ்த்தி தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது தங்கள் சுய சேவித்தல் என்ற எண்ணப்போக்கில் தொடர்ந்து, தேவனுடைய எதிர்ப்பை அனுபவித்து உணர முடியும்.

## தெரிவு (4:7-10)

சுயநலத்தை நமது வாழ்வில் இருந்து நீக்குவதற்காகவும் தேவனைக் கட்டுப்படுத்துபவராக இருக்கச் செய்வதற்காகவும், கிறிஸ்தவர்கள் நமது இச்சைகளுக்கு விட்டுக்கொடுத்துவிடாது "தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க" வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார் (4:7). "கீழ்ப்படிதல்" என்ற வார்த்தை அடிப்படையில் ஒரு இராணுவ வார்த்தையாக உள்ளது மற்றும் இது "கீழான பதவிக்கு" என்று அர்த்தப்படுகிறது. சுயநலத்தில் இருந்து குணமடைவதற்கு, ஒரு கிறிஸ்தவர் தம்மை கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும்.

கீழ்ப்படுத்துதல் என்பது வேதாகமத்திலுள்ள கடினமான பாடக்கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. சிலவேளைகளில் நாம் இந்தச் சொற்றொடரைக் காணும்போது, நாம் நின்று, "அது அர்த்தப்படுத்துவது என்ன?" அல்லது "அதை நான் எவ்வாறு செய்யலாம்?" என்று கேட்கிறோம். ஆனால் யாக்கோபு நிருபத்தில் பிரச்சனை அதுவல்ல! கீழ்ப்படிதலின் ஐந்து படிநிலைகளைப் பட்டியலிடுவதன் மூலம் யாக்கோபு அந்தக் கீழ்ப்படிதல் பற்றிய சித்தரிப்பை விசுவாசிக்கு நிறைவாக்குகிறார்.

*முதலாவது, "ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (4:7).* பொல்லாங்கைக் கவர்ச்சிகரமானதாகக் காண்பிக்கும் திறமை தவிர, சாத்தான் கிறிஸ்தவர் மீது எந்த அதிகாரத்தையும் கொண்டிருப்பதில்லை. நீங்கள் அந்தப் பளபளப்பினால் பிடிக்கப்பட்டு பிசாசின் மாயங்களுக்கு எதிர்நின்ற உடன், அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் என்று யாக்கோபு வாக்குறுதி

*அளிக்கிறார்.*

*இரண்டாவது, "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார் ..." (4:8).* நமது பாவமும் சுயநலமும் நம்மைத் தேவனிடத்தில் இருந்து பிரித்து வைத்துள்ளன. நமது சுயநலம் குணமாக்கப் படுவதற்கு, கர்த்தருடன் நெருக்கமான ஒரு உறவு முறைக்கு விசுவாசி திரும்ப வேண்டும்.

*மூன்றாவது, "... பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" (4:8).* ஒருவர் கர்த்தரிடம் எவ்வளவுக்கு எவ்வளவு நெருங்குகிறாரோ அவ்வளவுக்கு அவரது சொந்த வாழ்வில் உள்ள பாவத்தின் மீது கடும் வெறுப்பு அதிகமாகிறது என்று யாக்கோபு அறிகிறார். சுயநலம் என்பது வாழ்வை மாசுபடுத்தியுள்ளது மற்றும் தூய்மைப்படுத்துதல் தேவைப்படுகிறது. "கைகள்" மற்றும் "இருதயங்கள்" என்ற வார்த்தைகளைக்கொண்டு அவர் (யாக்கோபு), நாம் உள்ளாகவும் புறம்பாகவும் சுத்திகரிக்கப்படவேண்டியது அவசியம் என்று கூறுகிறார்.

*நான்காவது. "நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது" (4:9).* (மத்தேயு 5:4ல்) இயேசுவின் வார்த்தைகளை எதிரொலித்து யாக்கோபு, நாம் உண்மையாகவே தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் நாம் உண்மையாகவே மனந்திரும்ப வேண்டும் என்று கூறுகிறார்.

*ஐந்தாவது, "கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (4:10).* நாம் படைக்கப்பட்டவர்கள் என்பதையும் யொகோவா படைப்பவர் என்பதையும் நாம் உணர்ந்தறிய வேண்டும். நாம் இந்தப் புரிந்துகொள்ளுதலுக்கு வரும்போது இது, கீழ்ப்படிதலுக்கு உதவக்கூடிய மன அமைவை நாம் கொண்டிருக்க நமக்கு உதவுகிறது. இது நமது சித்தத்தை அல்ல ஆனால் பரலோகத்தில் உள்ள நமது பிதாவின் சித்தத்தைச் செயல்படுத்தும் ஊழியர்கள் என்ற வகையில் நமது பணிப்பொறுப்பை நாம் புரிந்துகொள்ளக் காரணமாகிறது. தேவனுக்குக் கீழ்ப்படிந்திருத்தல் என்பது மாபெரும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்குள் வழிநடத்துகிறது. யாக்கோபு இங்கு எழுதுகிற உயர்த்துதல் என்பது மேலான வாழ்வு பற்றியதாகும். கிழக்கத்திய முடியரசர் ஒருவருக்கு முன்பாக, இரக்கத்தை வேண்டி முகங்குப்புற விழும் ஒரு நபர் என்பதே இவ்விடத்தில் யாக்கோபு சித்தரித்த சித்திரமாக இருந்தது. அந்த முடியரசர் தமது அரியணையில் இருந்து முன்னோக்கிச் சாய்ந்து, வேண்டுகோள் விடுப்பவரின் முகத்தைத் தரையில் இருந்து தூக்குகிறார். அந்த நபர், தமது வேண்டுகோளை அரசர் நிறைவேற்றினார் என்று அறிந்து, மாபெரும் சந்தோஷத்துடன் எழுகிறார்.

## முடிவுரை

இவ்வசனப்பகுதியில் யாக்கோபு கூறுவதன் முக்கியத்துவத்தை நாம் காண்கிறோமா? சகோதரருக்கு இடையிலான "யுத்தங்கள் மற்றும் சண்டைகள்" என்பவை தீவிரமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்களாக உள்ளன என்று நாம் உணர்ந்து அறிகிறோமா? அந்த "யுத்தங்களும் சண்டைகளும்" நமது சுயநலமான இச்சைகளினால் உண்டாகின்றன என்று நாம் காண்கிறோமா? இந்த சுயநல இச்சைகள், தேவனுடனான நமது உறவுமுறையில் நாம் ஒரு வேசியைப் போல்

*செயல்படக் காரணமாகின்றன என்று நாம் காண்கிறோமா? தேவனுக்கு முழுமையாகக் கீழ்ப்படிதல் என்பதே, இந்தச் சுயநல இச்சைகளில் இருந்து நாம் நம்மை விடுவித்துக்கொள்வதற்கான ஒரே வழியாக உள்ளது.*

*நீங்கள் உங்களைத் தேவனுக்குக் கீழ்ப்படிதலில் ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா?*